**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.474/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W-8 |
| Name | : | சுரேஷ்விஸ்வநாத், வயது 42 |
| Father Name/Husband Name | : | செந்தில்குமார் |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | மோட்டார் வாகன ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 1st day of July 2025.

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்தபோது நாலாட்டின்புதூர் காவல் நிலைய குற்ற எண். 96/2023 இதச பிரிவுகள் 279, 304A இவ்வழக்கில் சம்பந்தபட்ட KL20P0948 என்ற பதிவெண்ட லாரியை 31.05.2023 ஆம் தேதி எங்கள் அலுவலகத்தில் வைத்து விபத்து ஆய்வு செய்தேன். மேற்படி வாகனத்தில் front body, grill, bumper, both side head light, cabine both side door, roof top cabine, tash board, stearing box wheel, Radiator and engine block bet ஆகியவைகள் சேதடைந்திருந்தததது. மேற்படி விபத்து இயந்திர கோளாறால் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன்.(**அந்த மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2 அதே வழக்கில் சம்பந்தபட்ட மற்றொரு வாகனமான TN28P4528 என்ற good vehicle வாகனத்தை 31.05.2023 அன்று எனது அலுவலகத்தில் வைத்து விபத்து ஆய்வு செய்தேன். மேற்படி வாகனத்தில் right hand side rear breake light and right hand side door ஆகியவை தேசமடையப்பட்டது. மேற்படி விபத்து இயந்திர கோளாறால் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன்.(**அந்த**

**மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3 நான் சம்பவம் இடம் சென்று இரண்டு வாகனத்தையும் வாகன தணிக்கை செய்யவில்லை என்றால் சரிதான். எனது ஆய்வுப்படி அ.சா.ஆ.7 ன் வானகத்திற்கு இயந்திர கோளாறு இருந்தாக ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ 7 ன் வாகனத்தற்கு ஆய்வு செய்யும்போது indicator செயல்பட்ட நிலையில் இருந்ததாக அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் ஆய்வு செய்தால்தான் மேற்படி வாகனங்களின் சேதாரங்களை சொல்ல முடியும் என்றால் சரியல்ல.

4 31.05.2023 அன்று மேற்படி இரண்டு வாகனங்களை ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாக வழக்கில் துலங்காது என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எந்த விதமான வாகனத்தையும் ஆய்வு செய்யவில்லை என்றாலும், ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி வாகனங்களை ஆய்வு செய்யும்போது சேதம் அடைந்த பாகங்களை தனியாக ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.